வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

நாள்: 23.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளுக்கான நிதி வசதிகளையும் தடுக்க, பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் ஒன்றுபட்டு வலுவாக ஒத்துழைக்க வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியாவின் வருடாந்திர எண்ணெய் இறக்குமதியை குறைத்தல் அவசியம் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரும் தொழில் முனைவோராக மேம்பட்டால்தான், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி சாத்தியமாகும் என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் கட்டுமானத் தொழிலாளர்கள், மற்றும், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தீபாவளி ஊக்கத் தொகை அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*மோடி-பிரிக்ஸ்* 1 (18)

தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளுக்கான நிதி வசதிகளையும் தடுக்க, பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் ஒன்றுபட்டு வலுவாக ஒத்துழைக்க

வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இதில் இருவேறு நிலைப்பாடுகளுக்கு இடமே இல்லை என்று, அவர் இன்று ரஷ்யாவின் கசான் நகரில், 16ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் முழு அமர்வில் பேசுகையில் கூறினார். தீவிரவாதத்தை தடுப்பது குறித்து, ஐநா மூலம், விரிவான சர்வதேச ஒப்பந்தம் உருவாக்கும் பிரச்சனையிலும், சைபர் பாதுகாப்பு, மற்றும், செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஒழுங்குமுறை விதிகளிலும், உலக நாடுகள் இடையே, ஒருங்கிணைந்த செயல்பாடுகள் தேவை என்று, அவர் வலியுறுத்தினார்.

தீவிரவாதம், போர்ப் பிணக்கு, நிச்சயமற்ற பொருளாதாரச் சூழல், வானிலை மாற்றம் போன்ற பல்வேறு சவால்களுக்கு இடையே பிரிக்ஸ் மாநாடு நடைபெறுவதை பிரதமர் சுட்டிக் காட்டி, இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில், உலகம், பிரிக்ஸ் நாடுகள் மீது பல எதிர்பார்ப்புகளை வைத்திருப்பதாக கூறினார். கொரோனா பிரச்சனையை ஒருங்கிணைந்து முறியடித்த பிரிக்ஸ் நாடுகள், பாதுகாப்பான, வலுவான, வளமான எதிர்காலத்தை உருவாக்குவதிலும் ஒருங்கிணைந்து செயல்பட முடியும் என்று அவர் குறிப்பிட்டார். உணவுப் பாதுகாப்பு, எரிசக்திப் பாதுகாப்பு,

*மோடி-பிரிக்ஸ்* 2 (15)

சுகாதாரம், குடிநீர், பணவீக்கம் போன்றவை, எல்லா நாடுகளுக்குமே பிரச்சனைதான் என்றும், பலதரப்பட்ட நாடுகள் அடங்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பு, இப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கான தீர்வுகளை, மக்களை

மையமாக கொண்டு உருவாக்குவதில், முக்கிய பங்காற்ற இயலும் என்றும் அவர் கூறினார்.

உலகில், வடக்கு-தெற்கு, மற்றும், கிழக்கு-மேற்கு பாகுபாடுகள் குறித்து அதிகம் பேசப் படுவதை, பிரதமர் எடுத்துக் கூறினார். பிணக்குகளை தீர்க்க, பேச்சு வார்த்தை மற்றும் தூதரக முயற்சிகளை இந்தியா ஆதரிக்குமே தவிர, போரை அல்ல என்று, அவர் குறிப்பிட்டார். உலகின் பொது நன்மைக்கான பிரிக்ஸ் கூட்டமைப்பில், புதிய நாடுகள் சேரத்துக் கொள்ளப் படுவதை வரவேற்க இந்தியா தயார் என்றும், இதற்கான முடிவுகளை பொதுக் கருத்து அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்றும், பிரதமர் கூறினார். ஐநா பாதுகாப்பு சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தம் கொண்டு வரும் பணிகளை காலக்கெடு அடிப்படையில் முன்னெடுத்து செல்ல வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

--------------------------

*எரிபொருள் இறக்குமதி* (10)

இந்தியாவின் 22 லட்சம் கோடி ரூபாய் வருடாந்திர எண்ணெய் இறக்குமதியை, அவசரமாக குறைத்தல் அவசியம் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பொறியியல் சொத்துக்களின் மேலாண்மை குறித்த 18ஆவது உலக மாநாட்டில் பேசுகையில் அவர்

இவ்வாறு வலியுறுத்தினார். 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்த வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கனவை நிறைவேற்ற, தொழில்நுட்பங்களே மிக முக்கியம் என்றும், இதற்கான பொறியியல் சொத்துக்களின் தரத்தை பராமரிக்க, உரிய ஆராய்ச்சிகள் தேவை என்றும் அமைச்சர் கூறினார்.

--------------------------

*பண்பலை* (6)

நாடு முழுவதும், 234 நகரங்களில், மொத்தம் 730 தனியார் பண்பலை வானொலி அலை வரிசைகள் தொடக்கப்பட உள்ளன. தனியார் துறையினருக்கு இதில் உள்ள வாய்ப்புகள் குறித்து, சென்னையில் இன்று மாலை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில், அமைச்சகத்தின் இணைச் செயலர் திரு. சஞ்சீவ் சங்கர், படவிளக்கம் அளிக்கிறார்.

--------------------------

*கைலாஷ் நாதன்* 1 (17)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரும், தொழில் முனைவோராக மேம்பட்டால்தான், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்னும் கனவு நனவாகும் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார். மாநில ஆதி திராவிடர் வணிக, மற்றும், தொழில் வளர்ச்சிக் கூட்டமைப்பின் சார்பில், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, எஸ்சி-எஸ்டி

பொருளாதார விடுதலை மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர், அரசின் பல்வேறு முயற்சிகள் காரணமாக ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் தற்போது கல்வியில் முன்னேறி, பெரிய பதவிகளில் உள்ள போதிலும், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து, தொழில் முனைவோர் அதிகம் வரவில்லை என்றும், இதற்கான காரணங்களை ஆராய்ந்து சரிப்படுத்துதல் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

மத்திய-மாநில அரசுகள், எஸ்சி-எஸ்டி சமூகத்தினருக்கான பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகின்ற போதிலும், இத்திட்டங்களின் பலன்கள், முழுமையாக உரியவர்களுக்கு சென்று சேரவில்லை என்றும், இக்குறையை போக்குவதற்கான முன்னெடுப்புகளை, ACTIV போன்ற அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் என, துணை நிலை ஆளுநர் கேட்டுக் கொண்டார். செபி, ஃபிக்கி, வணிகப் பேரவை போன்ற அமைப்புகளிலும்,



ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினரின் தேவைகளுக்கு, தனிப் பிரிவு ஏற்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அட்டவணை, மற்றும், பழங்குடி இனத்தவர் தொழில் மையத் திட்டம் உட்பட, எஸ்சி-எஸ்டி பிரிவைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கென அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை துணை நிலை ஆளுநர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். ஸடேண்ட்-அப் இண்டியா திட்டம் மூலம், தொழில் முனைவோர் 10 லட்சம் ரூபாய்

முதல் 1 கோடி ரூபாய் வரை வங்கிக் கடன் பெற முடியும் என்றும், முத்ரா கடன் திட்டத்தில், ஒரு குறிப்பிட்ட சதவிகித கடன், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றே விதிமுறை இருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசின் இத்தகைய திட்டங்களை அனைத்து பிரிவினரும் நன்கு பயன்படுத்திக் கொண்டு, தொழில் துறையில் முன்னேறுவதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்பது தனது விருப்பம் என்று திரு. கைலாஷ் நாதன் கூறினார். இதில் உள்ள சிக்கல்களை தம்மிடம் எடுத்துக் கூறலாம் என்றும், முதலமைச்சர், அமைச்சர்கள், மற்றும், அதிகாரிகளிடம் பேசி, தீர்வுக்கான வழிமுறைகள் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

--------------------------

*ரங்கசாமி* 1 (15)

புதுச்சேரியில் தீபாவளிப் பண்டிகைக்கான ஊக்கத் தொகையாக, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாயும், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபாயும் வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு.ரங்கசாமி அறிவித்துள்ளார். கான்ஃபெட் மூலமான தீபாவளி சிறப்பங்காடியில், முந்திரி, திராட்சை, வெல்லம் உட்பட, மொத்தம் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 10 பொருட்கள், 500 ரூபாய் மானிய விலையில் வழங்கப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார். புதுச்சேரியில்

இன்னும் 30 நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டி உள்ளதால், தீபாவளிப் பண்டிகைக்கான இலவச அரிசி மற்றும் சர்க்கரை, அந்தந்த பகுதியில் உள்ள அங்கன்வாடி, மற்றும், பள்ளிகள் வாயிலாக வழங்கப்படும் என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்க்கும் பணிகளுக்காக ஐடிபி வங்கி சார்பில், திஷா பவுண்டேஷன் மூலம், 97 லட்சம் ரூபாய் இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமியிடம் வழங்கப்பட்டது.

*ரங்கசாமி* 2 (5)

கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியின் போது உடன் இருந்தனர். இதன்மூலம், அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு உரிய புத்தகங்கள் வழங்கப்பட்டு, ஆங்கிலத்தில் சரளமாக பேச ஆசிரியர்கள் மூலம் கற்பிக்கப்படும் என்று, அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-------------------------

*புதுவை சிவம்* (5)

புதுச்சேரியில், கவிஞர் புதுவை சிவம் பிறந்த நாள் இன்று, அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. காமராஜர் சாலை-சித்தன்குடி சந்திப்பில் உள்ள அன்னாரின் சிலைக்கு, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.

செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-------------------------

*காப்பி எடிட்டர் (18)*

ஓர் அறிவிப்பு

புதுச்சேரி ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஒரு Copy Editor பணியிடத்திற்கு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 35-வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகள், ஊடகத் துறையில் 5 ஆண்டு அனுபவம் பெற்றிருந்தால், இதற்கு விண்ணப்பிக்கலாம். இதழியல், வெகு ஜனத் தொடர்பியல், மற்றும் சம்பந்தப்பட்ட இதர துறைகளில் பட்டம் அல்லது முதுகலைப் பட்டயம் பெற்றவர்களாக இருந்தால், 3 ஆண்டு ஊடகத் துறை அனுபவம் போதுமானது. விண்ணப்ப தாரர்கள், இந்தி அல்லது ஆங்கிலம், மற்றும், தமிழில் மொழித் திறன் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத் தேடுதல் பொறியின் பயன்பாட்டில் அனுபவம் உள்ளவர்களாகவும், நடப்பு விவகாரங்கள், பிராந்தியப் பிரச்சனைகள், மற்றும் தேசியப் பிரச்சனைகளை அறிந்தவர்களாகவும் இருத்தல், விரும்பத் தக்க தகுதியாக கருதப்படும். ஓராண்டு காலத்திற்கான, பின்னர் நீட்டிக்கத் தகுந்த, இந்த முழுநேர ஒப்பந்தப் பணிக்கு, மாதம் 35 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்படும். தகுதியும், மேற்கூறிய

நிபந்தனைகளின் அடிப்படையில் பணிபுரியும் ஆர்வமும் உள்ளவர்கள், applications.prasarbharati.org என்ற இணையதளம் மூலம், உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்கலாம்.

--------------------------

*புயல்* (19)

இன்று வங்கக் கடலில் உருவாகி உள்ள டானா புயல், நாளை அதிகாலை வாக்கில் தீவிர புயலாக மேலும் வலுவடைந்து, நாளை இரவுக்கும், நாளை மறுநாள் காலைக்கும் இடைப்பட்ட நேரத்தில், பூரிக்கும், சாகர் தீவுக்கும் இடையே, ஒடிசா மற்றும் மேற்கு வங்கக் கரையை கடக்கக் கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது அல்லாது குமரிக் கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலவுவதால், தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 29ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கோவை, நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நெல்லை, குமரி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு-மத்திய மேற்கு, வடகிழக்கு, மற்றும் வடமேற்கு வங்கக் கடல் பகுதிகளிலும், ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தின் கடலோரப் பகுதிகளிலும், சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என

அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே புயல் காரணமாக சென்னை, கடலூர், நாகை, புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட துறைமுகங்களில், 2ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

--------------------------

*பேரிடர் மேலாண்மை* 1 (17)

பேரிடர் அபாயங்களை எதிர்கொள்வதற்கான நெகிழ்வுத் தன்மை உள்ளவர்களாக இளைஞர்களை மேம்படுத்தும் வகையில், இளைஞர்களை மையமாக கொண்ட பேரிடர் மேலாண்மைக் கொள்கைகளை உருவாக்குதல் அவசியம் என்று, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த ராய் கூறியுள்ளார். இதற்கென, பேரிடர் மேலாண்மை அமைப்புகள், கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என, அவர் இன்று புதுடெல்லியில், சர்வதேச பேரிடர் அபாயக் குறைப்பு தின விழாவில் பேசுகையில் கூறினார். வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் இயற்கை பேரிடர் தொடர்பான இதர எச்சரிக்கை தகவல்களை இளைஞர்களுக்கு வழங்க, சமூக ஊடகத்தை அதிகம் பயன்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். டானா புயல் நிலவரங்களை, குறைந்தபட்ச உயிர் மற்றும் உடைமை சேதத்துடன் சமாளிக்க, போதிய முன் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதுகுறித்து, தேசிய பேரிடர் மீட்புப் படையின் தலைவர் திரு. மோசென் ஷகிதி இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தேசிய பேரிடர் மீட்புப்

படையின் 20 குழுக்கள் ஒடிசாவிற்கும், 13 குழுக்கள் மேற்கு வங்கத்திற்கும் அனுப்பப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

--------------------------

*கடலைப் பருப்பு* (9)

நாட்டில் பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப் பட்டுள்ளதாகவும், NAFED ஊள்ளிட்ட கூட்டுறவு அமைப்புகள் மூலம் விவசாயிகளின் பயறு விளைச்சலை முழுமையாக கொள்முதல் செய்ய, உடன்பாடு தயாரிக்கப் படுவதாகவும், மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ள்ளார். இன்று புதுடெல்லியில், பாரத் வணிக முத்திரையுடன் கூடிய, 2ஆம் கட்ட கடலைப் பருப்பு மற்றும் கொண்டைக் கடலை விற்பனையை தொடக்கி வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

--------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளுக்கான நிதி வசதிகளையும் தடுக்க, பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் ஒன்றுபட்டு வலுவாக ஒத்துழைக்க வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியாவின் வருடாந்திர எண்ணெய் இறக்குமதியை குறைத்தல் அவசியம் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரும் தொழில் முனைவோராக மேம்பட்டால்தான், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி சாத்தியமாகும் என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் கட்டுமானத் தொழிலாளர்கள், மற்றும், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தீபாவளி ஊக்கத் தொகை அறிவிக்கப் பட்டுள்ளது.